செ.வெ.எண் : 369 நாள் 03.05.2010

## தமிழ்நாடு அரசு

## உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

### பத்திரிக்கை செய்தி

அரசு உத்திரவின்படி சென்னை நகரம் உட்பட மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள மாவட்ட தலைநகரம், நகராட்சி, நகரியம் மற்றும் பேரூராட்சி பகுதியைச் சார்ந்த எரிவாயு இணைப்பு இல்லாத புதிதாக வழங்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா 5 லிட்டர் வீதம் வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. இதே போல் கிராமப் பகுதியை சார்ந்த எரிவாயு இணைப்பு இல்லாத, மற்றும் மாவட்ட தலைநகரம், நகராட்சி, நகரியம் மற்றும் பேரூராட்சி , ஏனைய கிராமப்பகுதியைச் சார்ந்த ஒரு எரிவாயு இணைப்பு பெற்றுள்ள புதிதாக வழங்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா மூன்று லிட்டர் வீதமும் மே 2010 மாதத்திற்கு மட்டும் மண்ணெண்ணெய் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இது சம்பந்தமாக புகார்கள் இருப்பின் சம்பந்தப்பட்ட உணவு துறை உதவி ஆணையர் அல்லது வட்ட வழங்கல் அலுவலரை தொடர்பு கொள்ளலாம்.

30/4

ஆணையாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

30/4